பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 10 2023 **SUNDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தெலங்கானாவில் 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் திட்டப்பணிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டினார்.

2. நாடு முழுவதும் 7 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில் "தூய்மையே சேவை" விழிப்புணர்வு பணிகள் இன்று நடைபெற்றன.

3. கடந்த மாதம் ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 712 கோடி ரூபாய் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

4. குன்னூர் பேருந்து விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்தியா இன்று 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ----

<<<<<<<>>>>>>

தேசிய மஞ்சள் வாரியம் அமைக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசு முறைப்பயணமாக தெலங்கானா மாநிலம் வந்துள்ள பிரதமர், ஹைதராபாதில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

மத்திய அரசு கொண்டுவரும் தேசிய மஞ்சள் வாரியத்தால் ஒட்டுமொத்த இந்தியாவும் பயன்பெறும் என்று அவர் கூறினார்.

**Mulug-**ல், மத்திய பழங்குடியினர் பல்கலைக்கழகம் தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கும் பிரதமர் இன்று அடிக்கல் நாட்டினார்.

சாலை, ரயில், பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் உயர்கல்விக்கான திட்டப்பணிகள் இதில் அடங்கும்.

ஹைதராபாத், - ராய்சூர் இடையேயான ரயில் போக்குவரத்தை, கிருஷ்ணா ரயில் நிலையத்தில் காணொலி வாயிலாக பிரதமர் தொடங்கிவைத்தார்.

மெகபூப் நகர், நாராயண்பெட் ஆகிய மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளுக்கு இதன்மூலம் முதல் முறையாக ரயில் சேவை கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நாக்பூர் - விஜயவாடா பொருளாதார மண்டலத்தில் நெடுஞ்சாலைத்திட்டத்தையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

கிரின் **Field** நான்குவழிப்பாதை, வாரங்கல் - கம்மம் மற்றும் கம்மம் - விஜயவாடா நான்குவழிப்பாதை உள்ளிட்ட 6 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நெடுஞ்சாலைத் திட்டங்கள் இதில் அடங்கும்.

ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம், கணிதம், புள்ளியியல், மேலாண்மை படிப்புகளுக்கான கட்டடங்களையும், மூன்றாவது பெரிய சொற்பொழிவு அரங்கையும் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி, தெலங்கானா ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

ஹைதராபாத்தின் பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, தெலங்கானா மாநிலத்தில் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ், 10 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மத்திய அரசின் திட்டங்களை தெலங்கானாவில் ஆளும் பாரத் ராஷ்ட்ர சமிதி அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்றும், ஒதுக்கப்பட்ட நிதியிலும் முறைகேடுகள் நடந்திருப்பதாக பிரதமர் கூறினார்.

மகளிருக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் வகையில், அவர்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

முத்ரா, அனைவருக்கும் வீடு, உஜ்வாலா ஆகிய திட்டங்களால் அதிக அளவில் பெண்கள் பயன்பெற்றுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

**<<<<<<<>>>>>>**

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு “தூய்மையே சேவை” விழிப்புணர்வு இயக்கம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்றது.

நாடு முழுவதும் 7 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற “தூய்மையே சேவை” விழிப்புணர்வு பணிகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, உடற்பயிற்சியாளர் **Ankit Baiyanpuriya** –வுடன் இணைந்து துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டார்.

மத்திய அமைச்சர்களும் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

தமது தூய்மைப்பணி குறித்த காணொலி பதிவை பிரதமர், சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, அஹமதாபாதில் இந்த இயக்கத்தின் கீழ் நடைபெற்ற தூய்மைப் பணிகளில் பங்கேற்று குப்பைகளை அகற்றினார்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர், ஹிமாச்சலப்பிரதேசம், **Hamirpur**-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று, தூய்மையே சேவை இயக்கத்திற்கான உறுதிமொழியை செய்து வைத்தார்.

தமிழகத்தில் மத்திய அரசு அலுவலகங்கள், கடற்கரை பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தூய்மையே சேவை இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தூய்மை விழிப்புணர்வு பணியில் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர், பொது காப்பீட்டு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

இந்த இயக்கத்தில் பங்கேற்று தூய்மை விழிப்புணர்வு பணி ஏற்படுத்தியுள்ளது குறித்து மாணவிகள் தங்களது மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

சென்னை அகில இந்திய வானொலி நிலைய வளாகத்திலும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னையில் உள்ள உணவுக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு தூய்மைப் பணிகளில் ஊழியர்கள் பங்கேற்றனர்.

சென்னையில் உள்ள ராஜாஜி பவன் மற்றும் சாஸ்திரிபவன் மத்திய அரசு அலுவலக வளாகங்களில் தூய்மையே சேவை விழிப்புணர்வு பணி இன்று காலை நடைபெற்றது.

மெரினா கடற்கரைப் பகுதியில், மாநிலக் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்றதோடு துப்புரவு பணிகளையும் மேற்கொண்டனர்.

<<<<<<<>>>>>>

கடந்த மாதம் ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 712 கோடி ரூபாய் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தைவிட இவ்வாண்டு பத்து சதவீதம் வரி வருவாய் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம், கிடைத்துள்ள வருவாய் கடந்த ஆண்டை விட 14 சதவீதம் கூடுதலாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் நான்காவது முறையாக மாதாந்திர வரி வருவாய் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடியை கடந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9-ஆக அதிகரித்துள்ளது.

மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன், சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன் ஆகியோர் இன்று சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை பார்வையிட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன், இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பலத்த காயமடைந்தவர்களுக்கு கோவை அரசு மருத்துவமனையிலும் லேசான காயமடைந்தவர்களுக்கு உதகை அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்..

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாநில அரசு சார்பில் 2 லட்சம் ரூபாய் நிவாரணமும், படுகாயமடைந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் அமைச்சர் நேரில் வழங்கினார்.

**<<<<<<<>>>>>>**

மாலத்தீவின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. **Mohamed Muizzu**–வுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் வாழ்த்துச் செய்தியை பதிவு செய்துள்ள பிரதமர், மாலத்தீவு உடனான நல்லுறவை வலுப்படுத்துவதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<<>>>>>>**

ஸ்லோவாக்கியா நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் பிரதமர் திரு. **Robert Fico** தலைமையிலான கட்சி வெற்றி பெற்றுள்ளது. 24 சதவீத வாக்குகளுடன் இந்த கட்சி வெற்றியை பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். இதனையடுத்து, யுக்ரைனுக்கு அளித்துவரும் ராணுவ ஆதரவு விலக்கிக் கொள்ளப்படும் என்று திரு. **Robert Fico** தலைமையிலான கட்சி அறிவித்தள்ளது.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்தியா இன்று 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் இந்தியாவின் **Avinash Sable** தங்கப்பதக்கம் வென்றார்.

குண்டு எறிதல் பிரிவில் **'Tajinder Pal Singh Toor '** தங்கம் வென்றார்.

ஆடவர் துப்பாக்கிச் சுடும் குழுப் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கத்தையும், மகளிர் குழுப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது.

கோல்ப் போட்டியில், **Aditi Ashok** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

கோல்ப் விளையாட்டில் பதக்கம் வென்ற முதல் இந்திய பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிருக்கான ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் **'Harmilan Bains** வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆண்களுக்கான ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் அஜய்குமார் வெள்ளிப்பதக்கமும், ஜின்சன் ஜான்சன் வெண்கலப்பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

ஆடவர் துப்பாக்கிச் சுடும் போட்டியின் **Trap** பிரிவில் **Chenai Kynan** வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 13 தங்கம், 19 வெள்ளி, 20 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<<<<END>>>>>>>**